வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 1019/அ2/2022, நாள் 07.04.2022

பொருள் : மெட்ரிக் பள்ளிகள்– குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2022 – 2023 ஆம் கல்வியாண்டில் அனைத்துச் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு நுழைவு நிலை வகுப்பில் **LKG** குறைந்த பட்சம் 25 % இட ஒதுக்கீடு வழங்குதல் – சேர்க்கை எண்ணிக்கை (Intake Capacity) கோருதல் மற்றும பள்ளிகளுக்கான அறிவுரை வழங்குதல் – சார்பு.

பார்வை :
1. சென்னை–6, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட மாநில முதன்மைத் தொடர்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண் 1476/ இ1/2022 நாள் 06.04.2022.
2. அரசாணை (நிலை ) 60 பள்ளிக் கல்வித் (எக்ஸ்2) துறை நாள் 01.04.2013
3. அரசாணை (நிலை ) 66 பள்ளிக் கல்வித் (எக்ஸ்2) துறை நாள் 07.04.2017

– – –

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் 2009 பிரிவு 12(1)(சி) ன்படி அனைத்துச் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு நுழைவு நிலை வகுப்பில் LKG குறைந்த பட்சம் 25 % இட ஒதுக்கீடு வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கு பார்வையில் உள்ள அரசாணைகளில் விரிவான வழிக்காட்டுதல் வழங்கப்பட்டுள்ளது , அவ்வழிக்காட்டுதல்களை பின்பற்றி 2013 –2014 முதல் 2021 –2022 ஆம் கல்வியாண்டு வரை மாணவர்கள் சேர்க்கை செய்யப்பட்டு பயனடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் நோக்கம் முழுமையாக நிறைவேறும் வண்ணமும், வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் அதிக அளவில் பயன் பெறும் வண்ணமும், வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும் பொருட்டு பார்வை 3ல் உள்ள அரசாணையில் கூடுதல் வழிக்காட்டுதலும், திருத்திய கால அட்டவணையும் வழங்கப்பட்டுள்ளது.

**பார்வையில் கண்ட அரசாணைகளின் படி 2022–2023 ஆம் கல்வியாண்டில் 25 % இட ஒதுக்கீடு கீழ் சேர்க்கை நடைமுறைகள் சார்ந்து கீழ்க்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை மெட்ரிக் பள்ளிகள் மற்றும் நர்சரி மற்றும் மெட்ரிக் பள்ளிகளில் தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டும்.**

1. சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் **LKG பள்ளி வாரியாக உள்ள மொத்த இடங்கள் மற்றும் அவற்றில்** உள்ள 25% இடங்கள் ஆகிய விவரங்களை மாவட்டக் கல்வி அலுவலகம், வட்டாரக் கல்வி அலுவலகம், சம்பந்தப்பட்ட மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மற்றும் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி தகவல் பலகையில் தவறாமல் அறிவுப்பு செய்யப்பட வேண்டும். **( சிறுப்பான்மை பள்ளிகள் எனில் கீழ்க்காணும் ( Intake Capacity) படிவத்தில் இன்மை அறிக்கை என பதிவிட்டு சிறுபான்மை பள்ளிக்குரிய ஆணையின் நகல் இணைக்கப்பட வேண்டும்.**

2. சட்டப்பிரிவு 12(1) (சி) இன் கீழ் சேர்க்கை வழங்க தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள் 2011, விதி எண் 4(1) இன் படி எல்.கே.ஜி வகுப்பிற்கு அருகாமையில் என்பது 1 கிலோ மீட்டர் ஆகும். 1 கிலோ மீட்டர் சுற்றளவில் வீடுகள் ஏதும் இல்லை எனில் அடுத்த 1 கிலோ மீட்டர் ஆகும்.
3. சட்டப்பிரிவு 12(1) (சி) இன் கீழ் சேர்க்கை கோரும் குழந்தைகளின் பெற்றோர் பள்ளிக் கல்வித் துறையின் இணையதளத்தில் இணைய வழியாக விண்ணப்பிக்கலாம். இணையதள முகவரி **rte.tnschools.gov.in**
4. பெற்றோர்கள் இணைய வழியாக எங்கிருந்து வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம் என அறிவிப்பு பலகையில் தெரியப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.மேலும் மாவட்டக் கல்வி அலுவலர் / வட்டாரக்கல்வி அலுவலர் / ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வட்டார வள மைய அலுவலகங்களில் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை இணைய வழியில் விண்ணப்பிக்க தக்க ஏற்பாடுகள் செய்யத் தெரிவிக்கப்படுகிறது.
5. தங்கள் பள்ளிகளில் விண்ணப்பங்கள் ஏதேனும் பெறப்பட்டால் , சார்ந்த பெற்றோர்களுக்கு ஒப்புகைச் சீட்டு ( அ.ஆ (நிலை) எண் 60 பள்ளிக் கல்வித் துறை நாள் 01.04.2013 இல் உள்ள ஒப்புகை சீட்டில் உடன் தவறாது வழங்கப்பட வேண்டும். இவ்விண்ணப்பங்களை தங்கள் பள்ளியிலேயே இணைய வழியில் பதிவேற்றம் செய்யலாம் அல்லது அருகில் உள்ள வ.எண் ல் உள்ள அலுவலகங்கள் மூலமாகவும் இணைய வழியில் பதிவேற்றம் செய்யலாம் என தெரிவிக்கப்படுகிறது.
6. தங்கள் பள்ளியின், தகவல் பலகையில் தங்கள் பள்ளிகளுக்குரிய நிர்ணயிக்கப்பட்டுள்ள இடங்களை குறிப்பிட்டு 13.04.2022 அன்று 12 (1) (சி) இன் கீழ் 25 % சேர்க்கைக்கான விண்ணப்பங்களை விண்ணப்பிக்க அறிவிப்பு வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
7. **தங்கள் பள்ளிகளுக்குரிய நுழைவு நிலை வகுப்பிலுள்ள LKG மொத்த இடங்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட 25 % இடங்கள் சார்ந்த விவரங்களை இவ்வலுவலக ‘அ2’ பிரிவில் மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளும் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகள் தங்கள் ஒன்றியத்திற்குட்பட்ட வட்டாரக் கல்வி அலுவலரிடம் மூன்று 3 நகல்களில் ஒப்படைக்கப்பட வேண்டும் மேலும் அவ்வாறாக பெறப்பட்ட ( Intake Capacity) படிவத்தினையும் தங்கள் ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து பள்ளிகளின் பெயர் பட்டியலுடன் தொகுத்து வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக அ2 பிரிவில் 10.04.2022 ற்குள் நேரில் சமர்பிக்க தெரிவிக்கப்படுகிறது, மேலும் தங்களிடமிருந்து பெறப்படும் படிவத்தில் உள்ள விவரங்கள் இவ்வலுவலக EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட**

**வேண்டியுள்ளதால் மேற்காண் தேதிக்குள் காலதாமதமின்றி ஒப்படைக்க சார்ந்த பள்ளிகள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.**

8. **18.04.2022 க்குப் பிறகு** எக்காரணத்தைக் கொண்டும் பள்ளிகளின் நுழைவு நிலை வகுப்பிலுள்ள **( LKG )** மொத்த இடங்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட 25 % இடங்கள் எண்ணிக்கையை **EMIS** இணையதளத்தில் மாற்றம் செய்ய இயலாது என திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
9. **20.04.2022 முதல் 18.05.2022 வரை இணைய வழியாக விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.**
10. **மாணவர்கள் சேர்க்கை பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே சென்றடையும் வகையில் அனைத்துச் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளிலும் பள்ளியின் பிரதான நுழைவு வாயிலில் ( Main Gate ) பொதுமக்களுக்கு நன்கு தெரியும் வகையில் பள்ளிப் பெயர் பலகைக்கு அருகிலும், பொதுமக்கள் பெருமளவில் கூடும் இடங்களிலும் 6"* 10 " அடி அளவில் கடந்த ஆண்டுகளில் வைக்கப்பட்டது போல் அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய அறிவிப்புப் பலகை ( Flex Board ) வைக்கப்பட வேண்டும் அவ்வாறான வைக்கப்படும் ( Flex Board ) ன் புகைப்படம் எடுத்து முதன்மைக் கல்வி அலுவலக மெட்ரிக் பள்ளிகள் மற்றும் நர்சரி பிரைமரி பள்ளிகள் ( Whats App Group ) ல் பதிவிடுமாறு அனைத்து பள்ளி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**மேற்காண் அனைத்து வழிமுறைகளை தவறாது பின்பற்றுமாறும் முழு பொறுப்பும் சார்ந்த பள்ளி முதல்வர்கள்/ தாளாளர்கள் ஆகும், மேலும் வ.எண் 7 ல் குறிப்பிட்டுள்ள படிவத்தினை மேற்காண் 10.04.2022 ற்குள் சமர்பிக்க இவ்வலுவலகத்திற்கு சார்ந்த பள்ளிகள் மற்றும் வட்டராக் கல்வி அலுவலர்கள் சமர்பிக்ககுமாறு உடன் நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.**

//ஒப்பம் //

இணைப்பு : படிவம்

//க.முனுசாமி //

முதன்மைக்கல்வி அலுவலர்,

வேலூர்.

பெறுநர்

1. தாளாளர்கள் / முதல்வர்கள்
   அனைத்து மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலை / நர்சரி & பிரைமரி பள்ளிகள் வேலூர் மாவட்டம்
2. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலருக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.